16.03.2026

அ.வ.எண். 148/2023

பி.சா.1 – திரு. கனகராஜன், த/பெ. நடராஜன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 16.03.2026 is accordance with the provision of Act X of 3331

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. பிரமாண வாக்குமூலததை படித்து பார்த்து தான் சொல்லியுள்ளேன். அதில் உள்ள விவரங்கள் உண்மையானது. வாதி வழக்கு சம்மந்தமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார். Toni & Guy என்ற நிறுவனமானது வழக்கு சொத்து 1000 சதுரடி உள்ள இடத்தில் வாடகைக்கு நடத்தி வந்தார் என்றால் இல்லை. வாடகைக்கு எடுத்தார், ஆனால் நடத்தவில்லை. Toni & Guy நிறுவனத்தை நடத்துவதற்காக எனது கடையை நடத்துவதற்காக வாதி எடுத்தார் என்றால் வாதி வாடகைக்கு எடுத்தார், ஆனால் நடத்தவில்லை. அதற்கு முன்பணமாக ரூ.1,00,000/- காசோலை மூலம் பெற்றேன் என்றால் ஆமாம். 1000 சதுரடி உள்ள கடைக்கு முன்பணமாக ரூ.5,50,000/- தொகை பேசினோம் என்றால் ஆமாம்.

2. அதில் ரூ.1,00,000/- காசோலையாக கொடுத்தது போக மீதம் ரூ.4,50,000/- தொகையாக கொடுத்தார் என்றால் இல்லை, காசோலையாக கொடுத்தார் அதை என்னால் தாக்கல் செய்துள்ளேன். பணம் கொடுக்கவில்லை என்றால் மேற்படி காசோலையை பயன்படுத்துமாறு வாதி செக்யூரிட்டிக்காக கொடுத்தார் என்றால் இல்லை. மேற்படி காசோலை நிரப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அதில் தேதி போடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். மேற்படி ரூ.4,50,000/- காசோலையை பி.சா.ஆ.1 காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வாதி, வாடகைக்கு வரவில்லை.

3. Toni & Guy உரிமம் வாதிக்கு கிடைக்கவில்லை. வாதி, Toni & Guy நிறுவனத்தை நடத்தி வந்தார் என்றால் இல்லை. உரிமம், ஒப்பந்தம் எதுவும் இல்லை. வாதியும், நானும், மாதம் ரூ.55,000/- வாடகை என பேசி ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்றால் ஆமாம். மேற்படி வாடகையை வாதி மாதம் மாதம் கொடுத்தார்

என்றால் இல்லை, கடையே நடத்தவில்லை. வாதி, 1000 சதுரடி நிலத்தில் Interior Work செய்துள்ளார் என்றால் இல்லை.  வாடகை ஒப்பந்தத்தில், மின் இணைப்பு மற்றும் தண்ணீர் இணைப்பு ஏற்பாடு செய்து தருவதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அவ்வாறு தண்ணீர் மற்றும் மின்சார இணைப்பு ஏற்படுத்தியதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஏற்கனவே மின் இணைப்பு உள்ளது. தண்ணீர் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளேன்.

4. ஏற்கனவே உள்ள மின் இணைப்பு சம்மந்தமாக மின் இணைப்பு எண் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு வராது. மின் இணைப்பு உள்ளது, அதை வாதி தான் தனியாக மீட்டர் வைத்து கொள்ள வேண்டும். வாதி கொடுத்த அட்வான்ஸ் தொகையை திருப்பி கொடுத்தேனா என்றால் இல்லை., வாதி 5 மாதம் வாடகைக்கு வரவில்லை. 4 -5 மாதங்கள் கழித்து Clearance வரவில்லை என்று சொல்லி அட்வான்ஸ் தொகையை திருப்பி கேட்டார். ஏற்கனவே 5 மாதங்களுக்கு ரூ. 2,50,000/- நஷ்டம் ஏற்பட்டுள்ளது, அதனால் பார்த்துவிட்டு சொல்கிறேன் என்று சொன்னார்.

5. வாதிக்கு நான் போதிய ஏற்பாடு செய்து தராததால் அவர் மேற்படி நிறுவனத்தை நடத்தவில்லை என்றால் சரியல்ல. அனைத்து வசதிகளும் உள்ளது. வாதி, 5 மாதம் வராததால் மேற்படி ஒப்பந்தத்தை ரத்து செய்ய வாதி வந்தாரா என்றால் இல்லை. நான் வாதியை அணுகி ஒப்பந்தத்தை ரத்து செய்ய கேட்டேனா என்றால் இல்லை. ஒப்பந்தத்தில் வாடகைக்கு வரவில்லை என்றால் ஒப்பந்தம் ரத்தாகிவிடும் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் வேறு நிறுவனத்திற்கு 1000 சதுரடி உள்ள கடையை வாடகைக்கு விட்டுள்ளேனா என்றால் சுமார் 1200 சதுரடியை வாடகைக்கு விட்டுள்ளேன்.

6. தற்போது வாடகைக்கு உள்ள நபருக்கு இந்த வழக்கு குறித்து தெரியுமா என்றால் தெரியாது. அது அவசியம் இல்லை. Meccanotecnica India Pvt., Ltd நிறுவனத்திற்கு வாடகைக்கு விட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன்.  வாதிக்கும், எனக்கும் ஒப்பந்தம் நிலுவையில் உள்ளபோது 21.08.2023 அன்று நான்Meccanotecnica India Pvt., Ltd  நிறுவனத்துடன் வாடகை ஒப்பந்தம்

ஏற்படுத்தியுள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி நிறுவனம் வாடகை செலுத்தியதற்கு நான் ரசீது கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி நிறுவனத்துடன் 31.07.2024 வுடன் முடிகிறது என்றால் சரிதான். பின்னிட்டு ஒப்பந்தத்தை நீட்டித்துள்ளோம். வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். 02.02.2026 வுக்குண்டான ரசீதை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதற்கான வாடகை நீட்டிப்பு ஒப்பந்தம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன்.

7. வாதி, 3 மாதங்கள் கடை நடத்தினார் என்றால் இல்லை. ரூ..4,50,000/-க்கான காசோலை குறித்து வாடகை ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur